சிவபுராணம் பாடல் + 91 9942684099

கோரஸ் நா. ரவி ரங்கசுவாமி

1 நாடு செழிக்க வேணும் நமசிவாய
நல்லதே நடக்க வேணும் நமசிவாய
குடும்பம் செழிக்க வேணும் நமசிவாய
மகிழ்ச்சி பொங்க வேணும் நமசிவாய

2 நினைத்தது நடக்க வேணும் நமசிவாய
நிம்மதி நிலைக்க வேணும் நமசிவாய
ஆரோக்யமாய் வாழ வேணும் நமசிவாய
அன்புடனே பழகவேனும் வேணும் நமசிவாய

3 நலமாக வாழ வேணும் நமசிவாய
பலமாக வாழ வேணும் நமசிவாய
வளமாக வாழ வேணும் நமசிவாய
வாழ்வாதாரம் காக்க வேணும் நமசிவாய

4 செல்வச் செழிப்புடன் வாழ வேணும் நமசிவாய
நின் நினைப்புடன் வாழ வேணும் நமசிவாய
சிறப்பாக வாழ வேணும் நமசிவாய
சிந்தித்து செயல்படணும் நமசிவாய

5 வாழ்த்து மழை பொழிய வேணும் நமசிவாய
வாழ்வாங்கு வாழ வேணும் நமசிவாய
காசு பணம் கிடைக்கவேணும் நமசிவாய
பொன்பொருள் சேர வேணும் நமசிவாய

6 நல்ல வேலை கிடைக்க வேணும் நமசிவாய
நல்ல தொழில் செய்ய வேணும் நமசிவாய
வருமானம் பெருக வேணும் நமசிவாய
சேமிப்பு பயன்படனும் நமசிவாய

7 நல்ல மழை பொழிய வேணும் நமசிவாய
நீராதாரம் பெருக வேணும் நமசிவாய
விவசாயம் செழிக்க வேணும் நமசிவாய
உணவுப் பொருள் கிடைக்க வேணும் நமசிவாய

8 இன்பமாய் வாழ வேணும் நமசிவாய
சுறுசுறுப்பாய் செயல்படணும் நமசிவாய
சுகாதாரமாய் வாழ வேணும் நமசிவாய
கடமையை நிறைவேற்றணும் நமசிவாய